# Economics of Insurance – Unit-2
# காப்பீடு பொருளாதாரம்

**Dr. B.BALAMURUGAN**
Asst.Professor, Research Dept. of Economics
The HH Rajah's Govt. College (A) - Pudukkottai

## 18UECA3 - Semester III - II BA (2020-21)



## காப்பீடு பொருளாதாரம் : அறிமுகம்

- பொருளியலில், **காப்பீடு** அல்லது **காப்புறுதி** *(insurance)* என்பது சார்ந்திருப்போர் இழப்பின் பாதிப்பு இடர்பாட்டினைக் கடப்பதற்கு முதன்மையாகப் பயன்படுத்தப்படும் இடர் மேலாண்மை வடிவமாகும்.

- பெரிய அளவிலான அதிர்ச்சியளிக்கும் இழப்பிற்கான வாய்ப்பை தவிர்க்கும் வகையில் ஒரு சிறிய உத்தரவாதம் மிக்க இழப்பாக ப்ரீமியத்தைப் பெற்று, ஒரு தரப்பிலிருந்து மற்றொரு தரப்பிற்கு இழப்பு இடர்பாட்டிற்கு சமமான மாற்றினை வழங்குவதே காப்பீடு ஆகும்.

- காபீட்டை விற்கும் நிறுவனம் **காப்பீடு வழங்குவோர்** என்றும்; **காப்பீடுதாரர்** அல்லது **பாலிசிதாரர்** என்று காப்பீட்டை பெற்ற நபரோ அல்லது தரப்போ அழைக்கப்படும்.
-
- **ப்ரீமியம்** என்றழைக்கப்படும் காப்பீட்டு பாதுகாப்பின் குறிப்பிட்டத் தொகையை நிர்ணயிக்கும் காரணி **காப்பீடு விகிதாச்சாரம்** ஆகும். கற்றல் மற்றும் வழக்கம் பிரிவில், இடர்பாட்டினை மதிப்பிடுதல் மற்றும் கட்டுப்படுத்துதல் வழக்கமான இடர் மேலாண்மை ஒரு தனிப்பிரிவாக உருவாகியுள்ளது.



# காப்பீட்டின் வரலாறு-1

- மனித இனம் தோன்றும்போது கூடவே தோன்றியதுதான் காப்பீடு என நாம் சில உணர்வுகளின் அடிப்படையில் கூறலாம்.
- மனித சமுதாயத்தின் பொருளாதாரத்தில் நாம் இரண்டு வகையை அறிவோம்.
- பணப் பொருளாதாரங்கள் [சந்தை, பணம், நிதிக்கருவிகள் மற்றும் பல] மற்றும் பணம் அல்லாத இயற்கைப் பொருளாதாரங்கள்
- [பணம் இல்லாத, சந்தைகள் ,நிதிசாதனங்கள் மற்றும் பல]இரண்டாவது வகை முதல் வகையை விட மிகப் பழமையானதுஅந்த மாதிரியான பொருளாதாரம் , மற்றும் கூட்டு வாழ்க்கையில் நாம் காப்பீட்டை மக்கள் ஒருவருக்கு ஒருவர் உதவிக்கொள்ளும் வடிவில் காணலாம்.

# காப்பீட்டின் வரலாறு-2

- உதாரணமாக, ஒரு வீடு எரிந்து விட்டால் அந்த சமுதாயத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் புதிய வீடு கட்ட உதவுவார்கள்.
- இதே மாதிரி ஒரு பக்கத்து வீட்டுக்காரருக்கு நேர்ந்தால் மற்ற பக்கத்து வீட்டுக்காரர் அதையே செய்யவேண்டும். இல்லாவிட்டால், அக்கம் பக்கத்தார் எதிர் காலத்தில் உதவி பெறமுடியாது.
- இன்றைய தினத்தில் இந்த மாதிரியான காப்பீடுகளில் நவீன பணப் பொருளாதாரத்துடன் நிதி சாதனங்கள் பரவாத சில நாடுகளில் இன்னும் இருந்து வருகிறது. [உதாரணம், ஐக்கிய சோவியத் பிரதேசத்தைச் சார்ந்த சில நாடுகள்.]

10/31/2020 Dr.Balamurugan 9443174749 6

i

Dr. Balamurugan. HHRC. Pudukkottai

## Health Insurance:

## மருத்துவக் காப்பீடு / உடல்நலக் காப்பீடு

10/31/2020 Dr.Balamurugan 9443174749 7

## Health Insurance - மருத்துவக் காப்பீடு

- ஒரு மருத்துவ காப்பீடு என்பது ஒரு பாலிசிதாரர் மற்றும் ஒரு காப்பீட்டு நிறுவனம் ஆகியவற்றுக்கு இடையே உள்ள சட்டப்பூர்வ ஒப்பந்தம் ஆகும்.
- இதில் காப்பீட்டாளர் அவருக்கு அனைத்து மருத்துவ செலவினங்களுக்காக பணம் செலுத்த ஒப்புக்கொள்கிறார்.
- காப்பீட்டு நிறுவனம் இதை ரொக்கமில்லா சிகிச்சையின் மூலம் செய்யலாம் அல்லது பில்களில் உள்ள தொகையை அளிக்கும்

10/31/2020 Dr.Balamurugan 9443174749 8

Dr. Balamurugan. HHRC. Pudukkottai

## மருத்துவ காப்பீடு வகைகள்

இதில் இரண்டு வகைகள் உண்டு:

- தனிநபர் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்,
- குடும்ப மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

10/31/2020 Dr.Balamurugan 9443174749 9

This study material is prepared by
Dr. Balamurugan Asst.Professor of HHRC, Pudukkottai

# வகைகள் .....தொடர்ச்சி

- தனிநபர் மருத்துவக் காப்பீட்டில், பாலிசிதாரர் ஒருவர் மட்டுமே மொத்த காப்பீட்டுத் தொகையையும் உபயோகிக்க முடியும்.
- குடும்ப உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகக் காப்பீடு எடுப்பதற்குப் பதிலாக, 'பேமிலி புளோட்டர் பாலிசி' எனப்படும் ஒரே ஒரு குடும்பக் காப்பீடு எடுக்கலாம்.

10/31/2020 Dr.Balamurugan 9443174749 10

Dr. Balamurugan. HHRC. Pudukkottai

# மருத்துவக் காப்பீட்டில் 'கோ-பே' முறை

- மருத்துவக் காப்பீட்டில் 'கோ-பே' மற்றும் காத்திருப்புக் காலத்தையும் கவனிக்க வேண்டும்.
- 'கோ-பே' என்பது பாலிசிதாரர் தனது மருத்துவச் செலவில் ஒரு பங்கை ஏற்றுக்கொள்வது.
- இம்முறை, காப்பீட்டுத் திட்டங்களைப் பொறுத்து கட்டாயமா, கட்டாயமில்லையா எனத் தெரியும்.
- மூத்த குடிமக்களின் காப்பீட்டுத் திட்டங்களுக்கு இது கட்டாயமாகும்.
- இம்முறையில் பிரீமியம் தொகை குறையும் என்பதால், 'கோ-பே' திட்டத்தைத் தேர்ந்தெடுத்து மருத்துவச் செலவில் ஒரு பங்கை ஏற்கலாம்.

10/31/2020 Dr.Balamurugan 9443174749 11

# மருத்துவ காப்பீடு - சில தகவல்கள்

- 3 மாத குழந்தை முதல் 86 வயது வரையானோர் இந்த பாலிசி எடுக்கலாம்.

**பயன்கள்**

- பிரீமியம் தொகை குறைவு.
- எதிர்பாராத விபத்து, திடீர் நோய்கள் போன்றவை, நிச்சயமில்லை என்றாலும் எப்போது வேண்டுமானாலும் ஏற்படலாம்.
- இதற்கு எவ்வளவு செலவாகும் என்பதையும் நம்மால் திட்டமிட முடியாது. ஆனால் ஒரு மருத்துவக் காப்பீடு எடுத்துக் கொள்வதன் மூலம் இது போன்ற நேரங்களில் செலவுகளைச் சமாளிக்க முடியும்.
- குடும்பத்தில் அனைவரது மருத்துவ செலவுகளையும் மருத்துவக் காப்பீடு மூலம் ஈடு செய்யலாம்.

10/31/2020 Dr.Balamurugan 9443174749 12

**இந்தியாவில்**

**மருத்துவ காப்பீடு பாலிசியின் சிறப்பம்சங்கள் மற்றும் நன்மைகள்**

Dr. Balamurugan. HHRC. Pudukkottai

## இந்தியாவில் மருத்துவ காப்பீடு பாலிசியின் சிறப்பம்சங்கள் மற்றும் நன்மைகள்

- ரூ.2 லட்சம் முதல் ரூ.50 லட்சம் வரை விரிவான மருத்துவ பாதுகாப்பு காப்பீட்டு விருப்பங்கள்
- ரொக்கமில்லா செட்டில்மெண்ட் - மருத்துவமனைகளின் பரந்த நெட்வொர்க்கில் ஏதாவது ஒரு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெறும்போது நீங்கள் எந்தத் தொகையையும் செலுத்த தேவையில்லை
- ஆம்புலன்ஸ் கட்டணங்கள் உள்ளடங்கும்
- அறை வாடகை வரம்பு இல்லை
- 10 ஆண்டுகள் வரை தடுப்பூசிக்கான செலவுகளுடன் புதிதாக பிறந்த குழந்தைக்கான காப்பீடு உள்ளிட்ட, மகப்பேறு நன்மைகள்

10/31/2020 Dr.Balamurugan 9443174749 14

## .....தொடர்ச்சி

- 30 நாட்கள் முன் மற்றும் 60 நாட்கள் பின்-மருத்துவமனை சேர்ப்பு பலன்கள்
- 130 தினசரி பராமரிப்பு செயல்முறைகளுக்கான செலவுகள் உள்ளடங்கும்
- உறுப்பு மாற்றம் செய்தலின் போது ஏற்படும் மருத்துவச் செலவுகள்
- அவசர ஆம்புலன்ஸ் கட்டணங்களுக்கு காப்பீடு வழங்கப்படுகிறது
- Ayush (ஆயுர்வேதா, யுனானி, சித்தா மற்றும் ஹோமியோபதி) சிகிச்சைகளுக்கும் காப்பீடு வழங்கப்படுகிறது





## .....தொடர்ச்சி

- நோ கிளைம் போனஸ் ஆக இலவச உடல்நல பரிசோதனைகள் மற்றும் தள்ளுபடி வவுச்சர்கள் ((முந்தைய ஆண்டில் ஒரு நபர் எந்தவொரு சிகிச்சைக்காகவும் கோரல் தாக்கல் செய்யவில்லை என்றால் NCB நன்மையாக அளிக்கப்படுகிறது.)
- நுழைவு வயது 60 ஆண்டுகள் வரை
- பிரிவு 80D-யின் கீழ் வருமான வரி நன்மைகள்
- கோரிக்கை இல்லாத ஒவ்வொரு ஆண்டுக்கு பின்னரும் பாலிசியை புதுப்பிக்கும்போது நோ கிளைம் போனஸ்
- குடும்ப உறுப்பினர்கள் அல்லது நண்பர்களை காப்பீட்டாளரின் கீழ் அதே பாலிசிக்கு பரிந்துரைத்த பின்னர் பிரீமியத்தில் லாயல்டி தள்ளுபடிகள்

## .....தொடர்ச்சி

- 24/7 கட்டணமில்லா வாடிக்கையாளர் சேவை மையம் உங்கள் பாலிசியை நீங்கள் எந்த நேரத்திலும் அணுகுவதை உறுதிசெய்கிறது
- பாலிசியை சிக்கலின்றி அமைப்பதற்கு ஆன்லைன் விண்ணப்பம் மற்றும் புதுப்பிப்பு
- முதிர்ச்சி வயது உட்பட, வாழ்நாள் முழுவதும் புதுப்பிக்கப்படும் திறன்
- ஒரு காப்பீட்டு பாலிசியை உங்கள் விருப்பப்படி வேறு எந்த காப்பீட்டாளருக்கும் மாற்றக்கூடிய திறன்

10/31/2020 Dr.Balamurugan 9443174749 17

# Life Insurance - ஆயுள் காப்பீடு

Dr. Balamurugan, HHRC, Pudukkottai

# ஆயுள் காப்பீடு என்பது என்ன?

- ஆயுள் காப்பீடு என்பது, காப்பீடு செய்யப்பட்ட தனிப்பட்டவர்கள் இறந்துபோனால் ஏற்படும் நிதிசார்ந்த இழப்புகளுக்கெதிரான பாதுகாப்பு ஆகும்.
- ஆயுள் காப்பீடு ஆனது, உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் நிதிப் பாதுகாப்பை வழங்குவதோடு, எதிர்பாராத ஏதேனும் துரதிர்ஷ்ட சம்பவங்களினால் ஏற்படும் பாதக விளைவுகளை எதிர்கொள்ள உதவுகிறது.

10/31/2020 Dr.Balamurugan 9443174749 19

---

# ஏன் ஆயுள் காப்பீட்டினைப் பெறவேண்டும்?

- ஆயுள் காப்பீடானது, அனைத்து அபாயங்களிலிருந்து, உங்களுக்கும் உங்கள் குடும்பத்துக்கும் பாதுகாப்பு வழங்குவதோடு, உங்கள் முதலீடுகளை மேலும் அதிகரிக்கும் வாய்ப்பினையும் வழங்குகிறது.
- இது, ஓய்வுகாலத்துக்குப் பின்னர், உங்கள் குழந்தையின் எதிர்கால செலவினங்கள் அல்லது உங்கள் செலவினங்களுக்கான நீண்டகால முதலீடாகப் பார்க்கப்படும்

10/31/2020 Dr.Balamurugan 9443174749 20

---

# ஆயுள் காப்பீட்டின் தேவை

- பின்வரும் தேவைகளுக்காக உங்களுக்கு காப்பீடு தேவை நிதித் தேவைகளுக்கு உங்களைச் சார்ந்துள்ள குடும்பத்திற்காக நீங்கள் காப்பீடு செய்வது அவசியம்: உங்கள் குடும்பம், நிதித் தேவைகளுக்கு உங்களைச் சார்ந்திருந்தால், நிச்சயமாக உங்களை நீங்கள் காப்பீடு செய்திருக்க வேண்டும்.

- ஆயுள் காப்பீட்டினைப் பெறுவதற்கு மிகப் பொதுவான காரணம் என்னவெனில், ஒருவேளை உங்கள் குடும்பத்தில் எதிர்பாரத இழப்பு ஏற்படின், அதற்குரிய பாதுகாப்பை ஆயுள் காப்பீடு வழங்கும். ஆயுள் காப்பீட்டு இலாபங்களை, உங்கள் குடும்ப உறுப்பினர்களின் செலவினங்களுக்காகப் பயன்படுத்த முடியும்.

- கடன் அல்லது பொறுப்புகள்: நீங்கள் கடன் வாங்கியிருந்தாலோ அல்லது உங்கள் சொத்துக்களை அடமானம் வைத்திருந்தாலோ, உங்களைக் காப்பீடு செய்துகொள்வது மிக முக்கியம். இதன்மூலம் மன அமைதி மட்டுமின்றி, குடும்பத்துக்கு நிலையான வருமானமும் கிடைக்கிறது.

10/31/2020 Dr.Balamurugan 9443174749 21

---

Dr. Balamurugan, HHRC, Pudukkottai

# ஆயுள் காப்பீட்டின் சேமிப்பு & முதலீடு

- ஆயுள் காப்பீட்டினை, கட்டாய சேமிப்பாகவும் முதலீட்டுக்கான வழியாகவும் பயன்படுத்தலாம்.

- ஆயுள் காப்பீட்டிலிருந்து பெறும் இலாபமானது, குழந்தைகளின் உயர் கல்வி அல்லது ஓய்வுகால நிதி அல்லது விடுமுறையைக் கழித்தல் போன்ற எதிர்கால செலவினங்களுக்குப் பயன்படும்.

- நிறுவனத்தின் கூட்டாளர் அல்லது சுய தொழில் புரிபவர்

10/31/2020 Dr.Balamurugan 9443174749 22

---

# .....தொடர்ச்சி

- நிறுவனத்தின் கூட்டாளராக உள்ளவர்கள் அல்லது சுய தொழில் புரியும் நிறுவன உரிமையாளர்களுக்கு ஆயுள் காப்பீடு மிக அவசியமானது.
- ஆயுள் காப்பீடானது, வாங்கி விற்கும் ஒப்பந்தத்தில் முதலீடு செய்வது போன்ற சில சிறப்பு வணிகப் பயன்பாடுகளுக்குப் பொருத்தமானதாக இருக்கலாம்.
- வணிக உரிமையாளர் இறந்துபோனால், அவருடைய வட்டிப் பணத்தினை வழங்க அல்லது வணிகப் பொறுப்புகளைக் கொடுத்துத் தீர்க்க, ஆயுள் காப்பீடு மூலம் கிடைக்கும் இலாபம் பயன்படுத்தப்படும்.

10/31/2020 Dr.Balamurugan 9443174749 23

Dr. Balamurugan, HHRC, Pudukkottai

# .....தொடர்ச்சி

- ஆர்.பி.ஐ. பத்திரங்களைத் தவிர, காப்பீட்டுத் திட்டங்கள் மட்டுமே 5 முதல் 25 வருடங்கள் வரையான கால வரையறை உத்தரவாதமுள்ள ஏனைய முதலீட்டுத் திட்டங்களாகும்.
- காப்பீட்டு நிறுவனங்கள், சிங்கிள் பிரீமியம் முதலீட்டுத் திட்டங்களையும் தொடர்ச்சியான முதலீட்டுத் திட்டங்களையும் வழங்குகின்றன.

10/31/2020 Dr.Balamurugan 9443174749 24

# யாரைக் காப்பீடு செய்யவேண்டும்?

- வருவாய் ஆதரவாளர் - உங்கள் குடும்பத்திற்கான வருவாய் ஆதரவாளர் நீங்கள் மட்டுமென்றால், முதலில் உங்களைக் காப்பீடு செய்துகொள்ளவும்.
- பணியாற்றும் வாழ்க்கைத் துணை - உங்கள் வாழ்க்கைத் துணை பணியாற்றுபவராக இருந்து, காப்பீட்டுத் திட்டத்தைப் பயன்படுத்துபவராகவும் இருந்தால், நீங்கள் இருவரும், இணைந்த - காப்பீட்டுத் திட்டம் ஒன்றைப் பெற முடியும்.
- 
- உங்கள் இருவரையும் காப்பீடு செய்த அந்த பாலிசி, உங்களுக்கு குறைந்த கட்டணத்தில் சேவையை வழங்குவதுடன், வரி - சேமிப்பு நோக்கங்களுக்காக, இருவரில் ஒருவர் இந்த பாலிசியை பயன்படுத்தலாம்.

10/31/2020 Dr.Balamurugan 9443174749 25

Dr. Balamurugan, HHRC, Pudukkottai

## .....தொடர்ச்சி

- குழந்தைகள் - உங்களுக்கு குழந்தைகள் இருந்தால், அவர்களுடைய பெயரிலும் ஆயுள் காப்பீட்டினை வாங்க முடியும்.
- உங்கள் குழந்தையின் உயர்கல்விக்காக குறிப்பிட்ட பணத்தொகையினைப் பெறுவதற்கு இது உத்தரவாதமளிக்கும்.
- உங்கள் குழந்தை அல்லது குடும்ப உறுப்பினர்கள், தங்கள் வாழ்வின் குறிப்பிட்ட காலத்தில், உத்தரவாதமளிக்கப்பட்ட பணத்தொகையினைப் பெற முடிவது, இது போன்ற பாலிசி மூலம் கிடைக்கும் பெருத்த அனுகூலமாகும்.



Dr. Balamurugan, HHRC, Pudukkottai

## .....தொடர்ச்சி

- வருமானம் ஈட்டிவந்த பெற்றோரில் ஒருவர், தமது குழந்தைகளின் உயர்கல்விக் காலத்தில் இறந்துபோகும்பட்சத்தில் வாழ்க்கைத்துணையால் கல்விக்குரிய பெருந்தொகையினை செலுத்த முடியாதபட்சத்தில், இந்த வகைப் பாலிசி கைகொடுத்து உதவும்.
- மேலும், இந்த வகையுான பாலிசியொன்று, பிள்ளைகளின் எதிர்காலத்துக்கான கட்டாய சேமிப்பை உறுதிசெய்கிறது.

## ஆயுள் காப்பீட்டின் அடிப்படைக் கூறுகள்

1. ரிஸ்க் கவரேஜ் (எ.கா.) டெர்ம் இன்சூரன்ஸ்)

2. எதிர்காலத்திற்கான சேமிப்பு (எ.கா. பியூர் எண்டோமென்ட்)

This study material is prepared by Dr. Balamurugan Asst.Professor of HHRC, Pudukkottai

10/31/2020 Dr.Balamurugan 9443174749 28

Dr. Balamurugan, HHRC, Pudukkottai


## காப்பீட்டு பாலிசி கட்டணம்

காப்பீட்டு பாலிசியை வாங்குவதற்கான கட்டணம் கீழ்கண்டவற்றைச் சார்ந்தது:

- உங்கள் வயது, உடல் நலம் மற்றும் உங்கள் பணியின் தன்மை
- தேர்ந்தெடுக்கப்பட்ட பாலிசியின் வகை.
- திட்டமிட்ட தொகை.
- பாலிசி காலம்.
- பிரீமியம் செலுத்தும் காலம்.
- பிரீமியம் செலுத்தும் முறை.

10/31/2020 Dr.Balamurugan 9443174749 29

## End of Unit-1




Dr. Balamurugan, HHRC, Pudukkottai

i